2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

167—

அங்கன்வாடி மையம்

***13287—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஈஸ்வரன்கோவில் ஊராட்சி, சுளிக்கிப்பட்டியில், அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, ஈஸ்வரன்கோவில் ஊராட்சியில் சுளிக்கிப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமப் பயனாளிகள் அனைவரும் ஒரு கிலோ மீட்டர் அருகில் உள்ள சீத்தப்பட்டி மையத்தின்மூலம் பயனடைந்து வருகிறார்கள். சுளிக்கிப்பட்டி கிராமத்தில் பயனாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாலும், இம்மையப் பயனாளிகளுக்குரிய பயன்கள் அனைத்தும் சீத்தப்பட்டி மையத்திலிருந்து வழங்கப்பட்டு வருவதாலும் இக்கிராமத்திற்கென தனியாக புதிய மையம் அமைக்க தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே குழந்தையைப் பெற்றெடுப்பது தாயாக இருந்தாலும், பெற்ற குழந்தையைப் பேணிப் பராமரிப்பது முதற்கொண்டு, அங்கன்வாடி மையத்திலே தொடங்கி, உயர் கல்வி மற்றும் திருமண வயது வரையிலே அந்தக்

குழந்தையைப் பேணிப் பராமரிக்கின்ற தாயாக, தமிழகத்தினுடைய தாயாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தம்மைக் காப்பதற்குத் தாயாக அம்மா இருக்கிறார்கள் என்கிற நம்பிக்கையோடுதான் தமிழகத்திலே குழந்தைகளும் நம்பிக்கையோடு பிறந்துகொண்டிருக்கின்றன. அந்தக் குழந்தைகளைப் பராமரிப்பதிலே, இன்னும் சொல்லப்போனால், ஏதோ செய்கிறோம் என்றில்லாமல் தாயின் பரிவோடு ஒரு தாய் தன் குழந்தைக்கு தயார் செய்கின்ற உணவிலே எத்தகைய கவனம் இருக்குமோ, எத்தகைய அன்பு இருக்குமோ, எத்தகைய பரிவு இருக்குமோ, எத்தகைய பாசம் இருக்குமோ அத்தனையும் கலந்து இன்றைக்குத் தமிழகத்திலே 13 வகையான கலவைச் சாதங்களை முத்தாக அறிமுகப்படுத்திக் கொடுத்து, உண்ண உணவு மட்டுமல்லாமல், உடை மட்டுமல்லாமல் உபகரணமும் கொடுக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே அங்கன்வாடி மையம் வேண்டுமென்று மக்கள் விரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். மக்களுடைய எதிர்பார்ப்பிற்கேற்ப, அந்த ஊராட்சியிலே சாத்தியக்கூறு இல்லையென்றாலும், விராலிமலை சட்டமன்றத் தொகுதியிலே பின்தங்கிய பல்வேறு பகுதிகளுக்காக விண்ணப்பித்திருக்கின்றோம். அப்படிப்பட்ட பகுதிகளுக்கு வாய்ப்பிருக்கிறதா என்பதை ஆய்ந்து அங்கே அங்கன்வாடி மையத்தைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அங்கன்வாடி மையங்களின் தேவையிருப்பைக் கணக்கிலே கொண்டுள்ளார்கள். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அங்கன்வாடி மையங்கள் அமைக்க ஆய்வு நடைபெற்று வருகிறது. விராலிமலை தொகுதியில் கலைக்குடிப்பட்டி, ஒருகோன்பட்டி, நெய்வெலிச்சாலை, சின்னப்பழனிப்பட்டி, வெள்ளாளப்பட்டி, கோவில்காட்டுப்பட்டி, வடமலாப்பட்டி ஆகிய 7 பகுதிகளில் புதிய மையங்கள் தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

கனிவான கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 புதிய அங்கன்வாடி மையங்கள் அமைக்க உத்தரவிட்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களுடைய சார்பிலே கோடானுகோடி நன்றிகளையும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

168—

பெண்கள் கலைக் கல்லூரி

***22856—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், குளித்தலையில் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கரூர் மாவட்டம், குளித்தலையில் ஏற்கெனவே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில்—அங்கே பெண்கள் அதிகம் படித்துக்கொண்டு வருகிறார்கள். அந்தக் கல்லூரியில் மொத்தம் 1,077 மாணவ, மாணவியர் படித்துக்கொண்டு வருகிறார்கள். இவற்றில் பெண்கள்